**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 5/2015**

| | | | |
|---|---|---|---|
| | | DEPOSITION OF WITNESS | PW.1 |
| NAME | அஜய் | TALUK | குடியாத்தம் |
| FATHER NAME | அப்பாகுட்டி | RELIGION | இந்து |
| AGE | 54 | OCCUPATION | |
| VILLAGE | அக்ராவரம் | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 17.11.2025.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. நான் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்கிறேன் என்றால் சரிதான். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளேன் என்றால் சொத்து வேண்டும் என கேட்டுள்ளேன். கடன்தொகையை கேட்டு வட்டியோடு திருப்பி செலுத்த வழக்கு போடவில்லை என்றால் சரிதான். 1ஆம் பிரதிவாதி கோகிலா இறப்பதற்கு முன்பு சுமார் 20 ஆண்டுகளாக என்னிடம் கொடுக்கல், வாங்கல் வைத்திருந்தார் என்றால் சரியல்ல.

2. கோகிலாவை எப்படி தெரியும் என்றால் அவர் சொத்தை எனக்கு விற்கிறேன் என்றதால் தெரியும். அவர் மேல்ரங்கசமுத்திரத்தில் வசித்து வருகிறார். நான் அக்ராவரத்தில் குடியிருக்கிறேன். மேல்ரங்கசமுத்திரத்திற்கும், அக்ராவரம் ஊருக்கும் சுமார் 3 கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால் 2 கிலோமீட்டர் இருக்கும். கோகிலா என்னிடம் சொத்து விற்பதாக சொல்லவில்லை என்றாலும் 2013ஆம் வருடம் என்னிடம் 40,000/- கடன் வாங்கினார் என்றால் சரியல்ல, சொத்து விற்பதற்காக 60,000/- பேசி 40,000/- அட்வான்ஸ் கொடுத்தேன்.

3. கோகிலா விற்பதாக சொல்கின்ற சொத்து எங்குள்ளது என்றால் மேல்ரங்கசமுத்திரத்தில் உள்ளது. சொத்துடைய ஆவணத்தை பார்த்தேனா என்றால் பார்த்தேன். என்னிடம் காட்டப்படும் விற்பனை ஒப்பந்த பத்திரத்தில் பட்டா உள்ளது என்றால் சரிதான். அவர் விற்பதாக சொல்லிய சொத்து பிரிக்கப்படாத இந்து கூட்டுகுடும்ப சொத்து என்றால் சரிதான். அந்த சொத்து கோபாலநாயுடு மக்கள் கோகிலா, கண்ணம்மாள் மற்றும் கஸ்தூரி ஆகியோர்களுக்கு கூட்டாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான்.

4. கிரய ஒப்பந்தத்தில் மொத்த சொத்திற்கும் சேர்த்து செக்குபந்தி போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சொத்தின் நான்கு பக்கத்திலும் என்னென்ன உள்ளது என்றால் வடக்கு தெரு, தெற்கு வரதராஜ நாயுடு, மேற்கு கங்கைய்ய நாயுடு, கிழக்கு கண்ணைய்ய நாயுடு. சொத்து விவரத்தில் 3060 சதுரடியில் 3ல் ஒரு பாகம் என சொல்லியுள்ள நிலையில் எந்த திசையில் உள்ள பாகம் என சொல்லமுடியுமா என்றால் முடியாது. 3ல் ஒரு பாகம் எவ்வளவு என அளவு குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

5. அந்த சொத்தில் வீடு உள்ளதா என்றால் உள்ளது. அந்த வீட்டில் தான் 3 பிரதிவாதிகளும் வசிக்கிறார்கள் என்றால் சரியல்ல கோகிலா மட்டும் வசித்து வருகிறார். 3060 சதுரடியில் எத்தனை சதுடியில் வீடுகட்டி வசித்து வருகிறார் என்றும் எத்தனை சதுரடி காலிமனை என்று சொல்ல முடியுமா என்றால் முடியாது. வீடு எந்த திசை நோக்கி வாசப்படி வைத்து கட்டப்பட்டுள்ளது என்றால் ஞாபகமில்லை.

6. கோகிலா எப்போது சொத்தை விற்பதாக என்னிடம் சொன்னார் என்றால் 14.12.2013-க்கு ஒரு மாதத்திற்கு முன்பு. நான் சொத்தை சென்று பார்த்தேன். ஆவணங்களையும் பார்த்தேன். சொத்து 3 பேர் பெயரில் கூட்டாக உள்ளதால் மற்ற இரண்டு நபர்களிடம் சொத்தை வாங்கட்டுமா என கேட்டேனா என்றால் கேட்கவில்லை. ஏன் அவர்களிடம் கேட்கவில்லை என்றால் அவர்கள் அங்கு இல்லை. தொலைபேசியில் கேட்கக்கூட முயற்சி செய்யவில்லை என்றால் சரிதான்.

7. எந்த தேதியில் விற்பனை பத்திரம் எழுதிகொடுத்தார் என்றால் 16.12.2013 ல் எழுதிகொடுத்தார். விற்பனை பத்திரத்தில் மொத்தம் 60,000/- பேசி 40,000/- பணம் கொடுத்து பாக்கி 20,000/- உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 40,000/- பணத்தை சொத்தை விற்பதாக சொல்லிய அன்றே வாங்கிக்கொண்டாரா என்றால் இல்லை பத்திரம் எழுதிய 16.12.2013-ல் வாங்கிக்கொண்டார். பாக்கி 20,000/-த்தை செலுத்த எவ்வளவு கால அவகாசம் நியமிக்கப்பட்டது என்றால் 11 மாதம்.

8. 20,000/- பாக்கி செலுத்த ஏன் 11 மாதம் காலக்கெடு போடப்பட்டது என்றால் பணம் இல்லாததால் நான் கேட்டு போடப்பட்டது. நான் வட்டிக்கு பணம் கொடுக்கும் நிலையில் 40,000/- கொடுத்துவிட்ட பிறகு 20,000/- கொடுக்க ஏன் 11 மாதம் போடப்பட்டது என்றால் என்னிடம் பணம் இல்லை. அந்த 11 மாதத்திற்குள் பாக்கி பணத்தை பெற்றுக்கொண்டு சொத்தை கிரயம் கொடுக்க கோகிலாவிடம் கேட்டேனா என்றால் கேட்டேன். கேட்டதற்கு வரேன் என்று சொன்னார்கள் ஆனால் வரவில்லை. சுமார் 10 முறை நேரில் சென்று கேட்டிருப்பேன்.

9. அதன்பிறகு 17.11.2014–ல் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். 15.11.2014–க்கு முன்பு காலக்கெடு முடிந்த நிலையில் ஏன் நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அந்த காலக்கெடு வரை நான் காத்திருந்தேன் அவர் வரவில்லை. வழக்கறிஞர் அறிவிப்பில் என்ன அனுப்பினேன் என்றால் பதிவு செய்து கொடுக்கவில்லை என்றால் வழக்கு போடுவேன் என அனுப்பினேன். அறிவிப்பு சென்றவுடன் கோகிலா என்னிடம் நேரடியாக பேசினாரா என்றால் அவர் அறிவிப்பை வாங்கவில்லை. அறிவிப்பு ஆள் இல்லை என திரும்ப வந்ததா என்றால் ஆமாம்.

10. அதன்பிறகு அவரிடம் சென்று அறிவிப்பு கொடுத்தேன் வாங்கவில்லை என்றும் அதனால் வழக்கு போடப்போவதாக பேசினேனா என்றால் பேசினேன். அப்போது கோகிலா வாங்கிய கடனை திருப்பி கொடுத்துவிட்டதாகவும் அதனால் ஏன் வழக்கு போடுகிறாய் என கேட்டார் என்றால் சரியல்ல. அதன்பிறகு 2015–ல் வழக்கு தாக்கல் செய்தேன். அப்போது சொத்தை பதிவு செய்து கொடுக்க வேண்டும் என்ற பரிகாரத்தை மட்டும் கேட்டிருந்தேன் என்றால் சரிதான். மாற்று பரிகாரம் ஏதும் கேட்கவில்லை என்றால் சரிதான்.

11. வழக்கு போடும்போது பாக்கிதொகை 20,000/–த்தை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் கோகிலாவுக்கு சென்ற சம்மனை அவர் வாங்கிவிட்டாரா என்றால் வாங்கிவிட்டார். சம்மன் சென்றபிறகு கோகிலா என்னிடம் வந்து நான் வாங்கிய கடனை திருப்ப செலுத்திவிட்டேன் ஏன் என்மீது வழக்கு போட்டுள்ளாய் என சண்டை போட்டார் என்றால் சரியல்ல. அவர் கேட்டபோது அவரிடம் உங்கள் மீது நடவடிக்கை எடுக்க மாட்டேன் என சொல்லி அனுப்பினேன் என்றால் சரியல்ல. நான் அதுபோல் சொல்லியதும் என் வார்த்தையை உண்மை என நம்பி கோகிலா சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. அதனால் தான் வழக்கு கோகிலாவிற்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்ப்பானது என்றால் சரியல்ல.

12. ஒருதலைபட்சமாக தீர்ப்பான பிறகுதான் பாக்கித்தொகை 20,000/–த்தை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்தேன் என்றால் சரிதான். ஒருதலைபட்ச தீர்ப்புக்கு கோகிலா மனு போட்டு அது நிலுவையில் இருந்தபோது 23.06.2020–ல் கோகிலா இறந்துவிட்டார் என்றால் சரிதான். ஒருதலைபட்ச தீர்ப்புக்கு எதிராக கோகிலா தாக்கல் செய்த மனு அனுமதிக்கப்பட்டு அதற்கு எதிராக நான் தாக்கல் செய்த மேல்முறையீட்டில் கோகிலாவின் வாரிசுகளை தரப்பினராக சேர்க்காததால் இந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் எனது வழக்கறிஞரை தான் கேட்கவேண்டும்.

13. இந்த வழக்கில் கோகிலாவின் வாரிசுகளை தரப்பினராக சேர்க்க நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. இறந்துபோன கோகிலா சுமார் 20 வருடங்களாக என்னிடம் பணம் கொடுக்கல் வாங்கல் வைத்திருந்தார் என்றாலும் 2013ஆம் வருடம் என்னிடம் ரூ.40,000/- கடன் வாங்கி அதற்கு அத்தாட்சியாக வெற்று பத்திரத்தில் கையெழுத்து போட்டு கொடுத்தார் என்றால் சரியல்ல. அவர் போட்டுகொடுத்த வெற்று பத்திரத்தை அடமானம் போடுவதாக சொல்லி பிறகு சொத்தை விற்பதற்காக கிரய ஒப்பந்தமாக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கடனுக்கு அத்தாட்சி கேட்டதால் வெற்று பத்திரத்தில் 1ஆம் பிரதிவாதி கையெழுத்து போட்டு கொடுத்தார் என்றாலும் அதை நான் தவறாக பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல.

14. உண்மையில் கிரய ஒப்பந்தம் எழுதி கொடுத்திருந்தால் காலகெடுவிற்குள் நான் நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றாலும் பொய்யான ஆவணம் என்பதால் நன் உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. பாக்கி தொகையை செலுத்தி கிரயம் பெற எப்போதும் தயாராகவே இருந்தேன் என தாவாவிலோ அல்லது பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை எனது வழக்கறிஞரை கேட்கவேண்டும். நான் கிரயம் பெற தயாராக இல்லை என்றாலும் அதனால் தான் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

15. சொத்தானது 1 முதல் 3 பிரதிவாதிகளின் மூதாதையர் சொத்து என்றாலும் 2 மற்றும் 3 பிரதிவாதிகளை கேட்காமல் நான் சொத்து வாங்கியதாக சொல்வது தவறு என்றால் 1ஆம் பிரதிவாதி 3ல் ஒரு பங்கு சொத்து அவருடையது என்றும் மற்றவர்களை கேட்க வேண்டிய அவசியம் இல்லை என சொன்னார். சொத்து வாங்குவதற்காக நான் பட்டா பார்த்தபோது 3 பேர் பெயரிலும் பட்டா கூட்டாக இருந்தது என்றாலும் கோகிலா பெயரில் தனியாக இல்லை என்றால் சரிதான். 3 பேருக்கு கூட்டாக உள்ள சொத்தை 1ஆம் பிரதிவாதி என் பெயரில் எழுதவேண்டிய அவசியமில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து சுமார் 15 இலட்சம் மதிப்பிருக்கும் என்றாலும் 60,000/-க்கு விற்க வேண்டிய அவசியமில்லை என்றால் அவ்வளவு மதிப்பு இல்லை.

16. விற்பனை ஒப்பந்த பத்திரத்தில் 3ல் ஒரு பங்கு சொத்து எந்த திசையில் உள்ளது என சொல்லாத நிலையில் அந்த விற்பனை ஒப்பந்தத்தை வைத்து நான் எந்த பரிகாரமும் கேட்க முடியாது என்றால் சரியல்ல. 3ல் ஒரு பங்கு சொத்திற்கு அளவு மற்றும் செக்குபந்தி சொல்லாததால் நான் எந்த பரிகாரமும் இந்த வழக்கில் கேட்க முடியாது என்றால் சரியல்ல. விற்பனை ஒப்பந்த ஆவணம் 1ஆம் பிரதிவாதியின் சொத்தை அடைய வேண்டி மோசடியாக தயார் செய்த ஆவணம் என்றால் சரியல்ல. சுத்தமான கரங்களோடு நீதிமன்றத்தை அணுகவில்லை என்றால் சரியல்ல.

17. உண்மையில் சொத்தை வாங்க வேண்டி ஒப்பந்தம் போட்டிருந்தால் பாக்கி கிரய பணத்தை செலுத்தி கிரயம் பெற தயாராக இருந்திருப்பேன் என்றாலும் ஆனால் அதுபோல் நான் தயாராக இல்லை என்றால் சரியல்ல. மாற்று பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்யாததால் இந்த தாவா நிலைக்கக்கூடியதல்ல என்றாலும் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்ய வழக்குமூலம் இல்லை என்றாலும் அதனால் நான் கேட்ட பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் முரணாக உள்ளது என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH
Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.